தமிழ்நாடுதகவல்ஆணையம்
எண்.19, அரசுபண்ணைகிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோரயில்நிலையம்அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணைநாள் 01.07.2026**

**முன்னிலை**
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநிலதகவல்ஆணையர்

*****

**வழக்குஎண். SA 1189/H/2024**

வாராகி மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர் பொது அதிகார அமைப்பு
சிவகாசி மாநகராட்சி
சிவகாசி
விருதுநகர் மாவட்டம்

கோரிய தகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03.08.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் ஒட்டு மொத்த அதிகாரிகள் பெயர், பதவி, விலாசம், அலைபேசி எண், e-mail Id, அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அவர்கள் எத்தனை ஆண்டுகள் சிவகாசி மாநகராட்சியில் பணிபுரிகின்றனர், நாள், மாதம், வருடம், அதிகாரிகள் மற்றும் கடைநிலை ஊழியர்கள் வரை அவர்களின் சம்பளம், அவர்கள் மீது எடுக்கப்பட்ட துறை ரீதியாக மற்றும் அலுவலக ரீதியாக கொடுக்கப்பட்ட தண்டனை அபராதம் சம்மந்தமாக தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 30.01.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு வாராகி இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர் திரு க. சத்தியராஜ், துப்புரவு அலுவலர், சிவகாசி மாநகராட்சி அவர்கள் ஒப்புதல் கடிதம் மூலம் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

<u>**ஆணை**</u>

**இன்றைய** (01.07.2026) **விசாரணையின் போது ஆஜரான பொது தகவல் அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளருக்கு** 05.09.2023 **தேதியிட்ட கடிதம் வாயிலாக** 8(1) (j) **படி தனி நபர் தகவல்கள் வழங்க வேண்டியதில்லை என்று தெரிவித்தாக கூறி, அதற்கான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகி தன்னுடைய கருத்தை எடுத்துரைக்கத் தவறிவிட்டார்.**

2. **இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:-**

1. **மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அளவுக்கதிகமானதெனவும், அத்தகவல்களை சேகரிப்பது மற்றும் தொகுப்பது எனும் பணியானது தகவல் பெறும் உரிமைச் சட்டம்,** 2005 **பிரிவு** 7(9)**ல் குறிப்பிட்டுள்ளவாறு, பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாது திசை திருப்புவதாக அமையுமெனவும் இவ்வாணையம் கருதுகிறது.**

2. **தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் தோற்றுரை / முகப்புரையிலேயே** (Preamble), **வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றுடன் அரசின் செம்மையான செயல்பாடு மற்றும் அளவாகவுள்ள நிதி ஆதாரங்களைத் திறம்பட பயன்படுத்துவது முதலிய மற்ற பொது நலன்களும் கருத்தில் கொண்டு இரு நோக்கங்களும் இணக்கமாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.**

3. **மாண்பமை உச்சநீதிமன்றம்,** Central Board of Secondary Education and Another - Versus - Aditya Bandopadhyay and Others (**Civil Appeal No.6454 of 2011 dated 09-08-2011**) என்ற வழக்கில் கீழ்கண்டவாறு **தெரிவித்துள்ளது:-**

**"பொது அதிகார அமைப்பிடம் (பணியில் வெளிப்படை தன்மை குறித்தோ மற்றும் அவர்கள் பொறுப்புடைமை குறித்தோ மற்றும் ஊழலை ஒழிப்பது குறித்தோ அல்லாமல்) பகுத்தறியாமல், செயற்முறைபடுத்த இயலாத வகையில் தகவல்களாக கேட்டு கோரிக்கை வைப்பதோ, அல்லது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அவ்வாறு வழங்க ஆணையிடுவதோ நிர்வாகத்தின் திறனுக்கு எதிர்மறையான விளைவை ஏற்படுத்துவதோடு, நிர்வாகத்தில் உள்ளவர்களை தகவல் சேகரித்து வழங்குவதை மட்டும் செய்து ஆக்கபூர்வமில்லாத பணியில் மூழ்கடிக்கச் செய்துவிடும். மேலும் 75 விழுக்காடு பொது அதிகார அமைப்பின் பணியாளர்கள், அவர்களது 75 விழுக்காடு நேரத்தினை தகவல்களை சேகரிக்கவும், மனுதாரர்களுக்கு அதை வழங்கிடவும் செலவிடுவதைப்போன்ற ஒரு காட்சியை நாடு காண விரும்பவில்லை. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வருகின்ற தண்டனைக்கு அஞ்சி பொது அதிகார அமைப்பின் பணியாளர்கள் தகவல் வழங்குவதற்கு முன்னுரிமை அளித்து, தேவையான மற்றும் வழக்கமான அவர்களது பணிகளை புறந்தள்ளும் நிலை எழக்கூடாது"**

4. மனுதாரர், இனிவருங்காலங்களில் பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை திசை திருப்பக்கூடிய வகையில் தகவல்களை கோராமல், தனக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் தகவல்களை மட்டும் குறிப்பிட்டுக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்குஎண். SA 1189/H/2024
பெறுநர்
பொதுஅதிகாரஅமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி
சிவகாசி
விருதுநகர் மாவட்டம்.

மேல்முறையீட்டாளர்

திரு வாராகி,
2/3, சதானந்த பாரதி தெரு,
கணபதிபுரம்,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 59.

Copy to : File
VM/PA